**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.270/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : சத்யா |
| Father/Husband's Name | : ஜவஹர்லால் |
| Village | :செங்கல்பட்டு |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.05.2026.

**முதல் விசாரணை:**

1. நான் செங்கல்பட்டு குடியிருந்து சமுக சேவை செய்து வருகிறேன். நான் கடந்த 04.02.2016 அன்று இரவு 7.30 மணியளவில் சிங்கபெருமாள்கோயிலில் இருந்து என்னுடைய இருசக்கர வாகனத்தில் செங்கல்பட்டு நோக்கி வந்து கொண்டிருந்த போது பரனூர் டோலை தாண்டிய போது ஒரு இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் என்னுடைய பக்கவாட்டில் வந்து என்னுடைய செயின் மற்றும் தாலியை அறுக்க முற்பட்டபோது செயின் மட்டும் அறுந்துவிட்டது. தாலி சரடு என்னுடனே இருந்தது. மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்து செயினை அறுத்தவர்கள் முகத்தில் துணி கட்டி இருந்ததால் என்னால் அடையாளம் காண முடியவில்லை.

2. மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் இருவரும் எனது செயினை பிடித்து இழுத்ததால் கீழே விழுந்ததால் எனக்கு இரு கால் முட்டிகளிலும் சிராய்பு காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த நபர் என்னை மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். மேற்படி சம்பவம் தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி திருடுபோன நகைகள் கிடைத்துவிட்டதாக போலீசார் என்னை காவல் நிலையம் அழைத்தார்கள். நான் சென்று எனது நகைகளை அடையளம் காட்டினேன். பின்னர் நகைகளை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று சென்றேன். மேற்படி நகைகளை நான் வீட்டில் வைத்திருக்கிறேன். எனது கையெழுத்துடன் கூடிய புகார் **அதசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>**குறுக்கு விசாரணை**</u>

நகை பறித்ததாக சொல்லப்படும் சம்பவத்தை குறித்து ஏற்பட்ட காயத்திற்கு நான் மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu